272—

கலையரங்கம்

***9015—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியிலுள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்டிருக்கிற பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதிய கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில் கலையரங்கமும், புதிதாகக் கட்டடங்களும் கட்டத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1987 ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தப்பட்டு அதிலே 6 முதல் 12 ஆம் வகுப்புவரை தமிழ்வழிக் கல்வியிலே சுமார் 729 மாணவிகளும், அதேபோல் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை 371 மாணவிகளும் என சுமார் 1,100 பேர் படித்து வருகிறார்கள்; 45 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஏற்கெனவே கட்டப்பட்ட 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடம் பழுதடைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஓடுகள் பதிக்கப்பட்ட கட்டடம் மிகவும் சிதிலமடைந்துள்ளது. அதிலே ஏழு வகுப்பறைகள் இருக்கின்றன. ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1,100 பேர் படிப்பது என்பது மிக அரிது. அதுமட்டுமல்லாமல்.*

2018 ஜூலை 5]

அந்தப் பள்ளி கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக 12 ஆம் வகுப்பில் தொடர்ந்து மாவட்ட அளவிலே முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருக்கிறது. எனவே, அந்தப் பள்ளியில் நிறைய மாணவிகளை பெற்றோர்கள் சேர்க்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஓட்டுக் கட்டடத்தை மாற்றுவதோடு, கூடுதல் வகுப்பறை, கீழே Auditorium *போன்றும், மேலே இரண்டு மாடிக் கட்டடமும் கட்டினால் 12 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். அங்கே* +1, +2*–ல் சுமார் 500 மாணவிகள் படிக்கிறார்கள். அந்த மாணவிகளுக்கு ஓர் ஆங்கில ஆசிரியர் மட்டும்தான் இருக்கின்றார். அதேபோல் தமிழ் ஆசிரியர்கள் இருவர் மட்டும் இருக்கிறார்கள்.* Commerce*–க்கு ஓர் ஆசிரியர்தான் இருக்கிறார். எனவே, கூடுதலாக ஓர் ஆங்கில ஆசிரியரையும், வணிக ஆசிரியரையும் இந்த ஆண்டு நியமிப்பதற்கும், போதுமான கட்டடங்களைக் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 6 ஆம் வகுப்பில் 106 பேர், 7 ஆம் வகுப்பில் 114 பேர், 8 ஆம் வகுப்பில் 120 பேர், 9 ஆம் வகுப்பில் 154 பேர், 10 ஆம் வகுப்பில் 164 பேர், 11 ஆம் வகுப்பில் 207 பேர், 12 ஆம் வகுப்பில் 235 பேர் என மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் 1,100 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். பழைய கட்டடமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பொதுப் பணித் துறையினருடன் கலந்து பேசி அந்தக் கட்டடத்தில் பழுது இருக்குமேயானால் உடனடியாக சரிசெய்து இந்த ஆண்டே நபார்டு திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். அதேபோல் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆங்கில ஆசிரியர், வணிக ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டே, 15 நாட்களுக்குள் தற்காலிகமாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

[2018 ஜூலை 5

முற்பகல் 10–15

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகாடு ஊராட்சி, மலைப் பகுதியாகும். பழனி தொகுதிக்குட்பட்ட பாச்சலூரிலிருந்து மாணவ, மாணவிகள் பள்ளிக்கு வர வேண்டுமென்றால் 35 கிலோ மீட்டர் கீழே உள்ள ஒட்டன்சத்திரம்தான் வர வேண்டும். அதை உணர்ந்து, 2010 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பரப்பலாறிலே ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டது. ஆனால், அதற்குக் கட்டடம் இல்லை. ஏற்கெனவே 4 ஏக்கர் அரசு நிலத்தை பள்ளிக் கல்வித் துறைக்கு நாங்கள் மாற்றியிருக்கிறோம். எனவே, இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே அங்கே கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, முத்தநாயக்கன்பட்டி, இடையகோட்டை, மார்க்கம்பட்டி, ஓடைப்பட்டி, சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, கீரனூர், தொப்பம்பட்டி, பெரியகோட்டை, தாழையூத்து போன்ற பல்வேறு மேல்நிலைப் பள்ளிகள், பல்வேறு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் பல்வேறு அரசு நடுநிலைப் பள்ளிகள் எல்லாம் கட்டட வசதி இல்லாமல் உள்ளன. மாணவர்களுடைய சேர்க்கை விகிதத்தின் அடிப்படையிலே, தேவைப்படுகின்ற பள்ளிகளுக்கெல்லாம் கூடுதல் வகுப்பறைகளைக் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பல்வேறு இடங்களில் தலைமையாசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை விரைவில் நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி, ஒரு கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறை மூலமாக 413 NEET Centres நடத்தினீர்கள். அதில் எத்தனை பேர் மருத்துவத் துறைக்குத் தேர்வாகியிருக்கின்றார்கள் என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கேள்வி அல்ல. ஒட்டன்சத்திரத்திலே ஆரம்பித்து சென்னை வரையிலும் கேள்வியை கேட்டுக்கொண்டே வந்திருக்கின்றார்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் பொறுத்தவரையிலே ஒன்றாவதாக, மலைப் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதிகள் இல்லை; ஆனால் 4 ஏக்கர் இடம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உடனடியாக இந்த ஆண்டே நபார்டு திட்டத்திலே இணைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

இரண்டாவதாக அவர் குறிப்பிட்டிருப்பது ஒட்டன்சத்திரத்திலே பல்வேறு பள்ளிகளிலே மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது என்றும், அங்கே புதிய கட்டடங்கள் கட்டப்படுமா என்றும் கேட்டுள்ளார்கள். முதன்மைக் கல்வி அலுவலரையும், பொதுப் பணித் துறையினுடைய நிருவாகப் பொறியாளரையும் அனுப்பி, எந்தெந்தப் பகுதிகளிலே கட்டடங்கள் கூடுதலாக தேவைப்படுகின்றன என்பதை ஆய்ந்து, இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே இணைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். அதோடுமட்டுமல்ல, இங்கே வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலே, ஒரு மாத காலத்திற்குள் எந்தெந்தப் பள்ளிகளில் கட்டட வசதிகள் இல்லையோ அவற்றையெல்லாம் ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். எங்கெங்கெல்லாம் பழுதான கட்டடங்கள் இருக்கின்றனவோ அவற்றைத் தகர்த்தெறிந்துவிட்டு புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கும், நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு பணிகளை மேற்கொள்வதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதேபோல் NEET தேர்வைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இப்போது என்னிடத்திலே புள்ளிவிவரங்கள் இல்லை. ஏனென்றால் NEET தேர்வு என்பது, நீங்கள் சொல்வது போல அல்ல. ஒரு புறத்திலே நாங்கள் மத்திய அரசை வலியுறுத்திக்

கொண்டிருக்கிறோம். NEET தேர்வில் தமிழகத்திற்கு விதிவிலக்களிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன. இருந்தபோதிலும்கூட, மனிதாபிமான அடிப்படையில் எங்களால் 412 NEET தேர்வு மையங்கள் துவங்கப்பட்டன. அதுமட்டுமல்ல, 82,000 பேருக்கு 10 volume புத்தகங்களும், C.D.–யும் வழங்கி பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் 3,112 மாணவர்களுக்கு 9 கல்லூரிகளிலே பயிற்சி தரப்பட்டு, அந்தக் கல்லூரிகளுக்கு மட்டும் ஆகியிருக்கின்ற செலவு ஏறத்தாழ நான்கரை கோடி ரூபாய். மேலும், தங்கும் வசதிகளும், உணவு வசதிகளும் ஏற்பாடு செய்து பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. முதல்கட்டமாக குறைந்த காலத்தில் இந்தப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, வருகின்ற காலத்தில் இதைச் சிறப்பான முறையிலே நிறைவேற்றுவதற்கு அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. வருகின்ற 15 ஆம் தேதிக்குப் பிறகு, NEET தேர்வைப் பொறுத்தவரையில் 412 மையங்களிலும் முழு பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள்.*

திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நதியைப்போல ஓடுகின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், காளையைப் போல பாய்கின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கல்விக்காக இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் தமிழகத்தில் 32,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்டார்கள். அந்த வழியில் வந்த மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், எங்களுடைய இராமநாதபுரம், புதூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள் கோரியது இந்த ஆண்டே நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூலை 5]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய அணைக்கட்டு அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இந்த இரண்டு மேல்நிலைப் பள்ளிகளிலும் சற்றேறக்குறைய 2,000 மாணவ, மாணவிகளுக்கு மேற்பட்டவர்கள் படிக்கின்றார்கள். அந்தப் பள்ளிக்கு சுற்றுச்சுவரையும், தேவையான பள்ளிக் கட்டடங்களையும் இந்த அரசு கட்டித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் பள்ளிக் கட்டடம் வேண்டுமென்று கோரியுள்ளார்கள். அவர் கேட்ட பள்ளிக் கட்டடங்களை அணைக்கட்டாகவே கட்டிவிடலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து compound wall–ஐ கட்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். கூடுதலாக பள்ளிக் கட்டடங்கள் தேவைப்படின், அரசு அவற்றைக் கணக்கெடுத்து, இந்த ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் இணைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், பட்டரைபெரும்புதூர் ஊராட்சியிலுள்ள தொடக்கப் பள்ளியின் பழைய கட்டடம் இடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த இடத்திற்குப் பதிலாக, காலியாக உள்ள இடத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். அரும்பாக்கம்

ஊராட்சியில் உள்ள பள்ளி, பழைய கட்டடத்தில் இருப்பதை மாற்றி புதிய கட்டடம் வழங்கிட வேண்டுமென்றும், கடம்பத்தூர் ஒன்றியம், கொண்டஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் வழங்கிட வேண்டுமென்றும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொடக்கப் பள்ளிகளில் உள்ள கட்டடங்கள் அனைத்தும், உள்ளாட்சித் துறையின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஒதுக்கப்படும் நிதியைப் பயன்படுத்தி புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு எந்தெந்தப் பள்ளிகளிலெல்லாம், மாணவர்கள் படிக்க இயலாத நிலையில் கட்டடங்கள் பழுதடைந்திருக்கின்றன என்பதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி, எந்தமாதிரியான முடிவுகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

273—

கோட்டப் பொறியாளர் அலுவலகம்

***16236—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியிலுள்ள கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து பர்கூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS